
**ஆகஸ்ட் – 09**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் பென்குயின் ரேண்டம் ஹவுஸ் பதிப்பகமானது, BlueKraft Digital Foundation எனும் இலாப நோக்கற்ற அமைப்பினால் எழுதப்பட்ட "370: Undoing the Unjust, A New Future for J&K" என்ற புத்தகத்தினை வெளியிட்டுள்ளது.
- மிதிவண்டியை/சைக்கிளை கருப்பொருளாகக் கொண்ட ஒரு தமிழ் திரைப்படமான பொன்முடி திருமலைச்சாமி இயக்கிய "BMW 1991" ஆனது, சர்வதேச திரைப்பட விழாவில் 22 விருதுகளை வென்றுள்ளது.
- தசைக்கூட்டு ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் மற்றும் எலும்பு மற்றும் மூட்டு கோளாறுகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 04 ஆம் தேதியன்று தேசிய எலும்பு மற்றும் மூட்டு தினம் அனுசரிக்கப்படுகிறது.
- பாதுகாப்பான மற்றும் திறம் மிக்க சாலைப் பயன்பாட்டை உறுதி செய்வதில் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் ஆகஸ்ட் 05 ஆம் தேதியன்று சர்வதேச போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 1,303 நீலகிரி வரையாடுகள்




- இரண்டாவது வருடாந்திர ஒருங்கிணைந்த வரையாடுகள் கணக்கெடுப்பில் தமிழ்நாடு மாநிலத்தில் 1,303 நீலகிரி வரையாடுகள் பதிவாகியுள்ளது.
- இந்த ஆண்டு ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு ஆனது தமிழ்நாட்டில் 177 தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது என்ற நிலையில் இது 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்

பட்டதை விட 36 தொகுதிகள் அதிகமாகும்.

- தமிழ்நாட்டின் மதிப்பிடப்பட்ட நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை 1,303 ஆக அதிகரித்துள்ளதோடு முந்தைய ஆண்டு பதிவு செய்யப்பட்ட 1,031 எண்ணிக்கையில் இருந்து இது அதிகரித்துள்ளது.
- கிராஸ் ஹில்ஸ் தேசியப் பூங்கா மற்றும் முகூர்த்தி தேசியப் பூங்கா ஆகிய பகுதிகள் நீலகிரி வரையாடுகள் அதிகம் காணப்படும் முதன்மையான பகுதிகளாகும் என்ற நிலையில் கிராஸ் ஹில்ஸ் பகுதியில் 334 நீலகிரி வரையாடுகள் பதிவாகியுள்ளன (2024 ஆம் ஆண்டில் இது 276 ஆக இருந்தது).
- முகூர்த்தி பகுதியில் 282 வரையாடுகள் பதிவாகியுள்ளது (கடந்த ஆண்டு இது 203 ஆக இருந்தது).
- சுமார் 155 நீலகிரி வரையாடுகள் கேரளாவின் எரவிக்குளம் தேசியப் பூங்காவை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றன.

# தேசியச் செய்திகள்

## கர்தவ்யா பவன் கட்டிடத்தின் அம்சங்கள்





- பிரதமர் சமீபத்தில் டெல்லியில் கர்தவ்யா பவன் கட்டிடத்தினைத் திறந்து வைத்தார்.
- கர்தவ்யா பவன் என்பது மத்திய விஸ்தா திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட முதல் பொதுவான மத்தியச் செயலக கட்டிடம் (CCS-3) ஆகும்.
- இது உள்துறை அமைச்சகம் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சகம் உள்ளிட்ட முக்கிய அமைச்சகங்களைக் கொண்டுள்ளது.
- ஒருங்கிணைந்த வாழ்விட மதிப்பீட்டிற்கான (GRIHA) நான்கு நட்சத்திர சான்றிதழைப் பெறுவதை கர்தவ்யா பவன் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கட்டிடத்தில் இரட்டை மெருகூட்டப்பட்ட ஜன்னல்கள் மற்றும் வசித்தல் மற்றும் பகல் நேரத்திற்கான உணர்வுக் கருவிகளுடன் கூடிய LED விளக்குகள் பொருத்தப் பட்டு உள்ளன.
- திறம் மிக்க அமைப்புகள் மூலம் 30 சதவீத ஆற்றல் நுகர்வைச் சேமிப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- கர்தவ்ய பவனின் மேற்கூரையில் உள்ள சூரிய ஒளி மின்னழுத்த அமைப்பு ஆனது, ஆண்டுதோறும் சுமார் 534,000 அலகு மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

- தினமும் 1.1 மில்லியன் லிட்டர் கழிவுநீரை சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துவதுடன், இந்தக் கட்டிடம் ஆனது சுழிய அளவில் உமிழ்வு அம்சம் கொண்ட மையமாக செயல் படுகிறது.
- மீண்டும் பயன்படுத்தப்படும் மறுசுழற்சி செய்யப்பட கழிவுநீரானது அக்கட்டிடத்தின் மொத்த நீர்த் தேவையில் 60 சதவீதத்தைப் பூர்த்தி செய்கிறது.
- திடக்கழிவு மேலாண்மையானது 1,000 கிலோகிராம் அளவிலான கரிமக் கழிவுகளை தினசரி அடிப்படையில் உரமாக மாற்றுகிறது.

## டிஜிட்டல் வங்கிச் சேவைக்கான ஆதார் அடிப்படையிலான முக அங்கீகாரம்

- இந்திய அஞ்சலகப் பண வழங்கீட்டு வங்கி (IPPB) ஆனது, நாடு முழுவதும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கு ஆதார் அடிப்படையிலான முக அங்கீகார முறையினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தப் புதிய அமைப்பானது, கைரேகை சரிபார்ப்பு மற்றும் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய கடவுச்சொற்களுக்கு (OTP) மாற்றாக முக அங்கீகாரத் தொழில் நுட்பத்தினை அறிமுகப்படுத்துகிறது.
- இந்தத் தொழில்நுட்பம் ஆனது, இந்தியத் தனித்துவ அடையாள ஆணையத்தின் (UIDAI) கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இந்த அம்சமானது, முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான வங்கிச் சேவையை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அஞ்சல் துறையின் கீழ் செயல்படுகின்ற IPPB ஆனது, சுமார் 165,000 தபால் நிலையங்கள் மற்றும் 300,000 தபால் ஊழியர்களில் இந்த முறையைச் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.




## கூட்டுக் கலந்தாலோசிப்பு வழக்கு

- பெங்களூரு மேம்பாட்டு ஆணையம் (BDA) சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் கூட்டுக் கலந்தாலோசிப்பு வழக்கு குறித்து இந்திய உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து

விசாரணை நடத்தியுள்ளது.

- பெங்களூருவின் வடக்கு தாலுக்காவில் 3 ஏக்கர் மற்றும் 33 குண்டா பரப்பிலான நிலம் தொடர்பான நடவடிக்கைகளை நீதிமன்றம் ஆய்வு செய்தது.
- இந்திய அரசியலமைப்பின் 32வது சரத்தின் கீழ் ஒரு நீதிப் பேராணை மனுவைப் பதிவு செய்ய நீதிமன்ற பதிவாளருக்கு அமர்வு உத்தரவிட்டது.
- மனுதாரர் S.V. விஜயலட்சுமி & பிறருக்கு எதிரான மோசடி மற்றும் பிற குற்றங்கள் தொடர்பான முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்து ஜூலை 31 ஆம் தேதியன்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- வழக்கில் முழுமையான நீதியை உறுதி செய்வதற்காக அரசியலமைப்பின் 142வது சரத்தின் கீழ் நீதிமன்றம் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தியது.
- பெங்களூரு மேம்பாட்டு ஆணையத்திற்கும், மேல்முறையீட்டாளர்களுக்கும் இடையிலான கூட்டுக் கலந்தாலோசிப்பு செயல்முறை காரணமாக சாதாரணக் குடி மக்களுக்கு நிலம் கையகப்படுத்துதலின் நன்மைகள் மறுக்கப்பட்டதாக நீதிமன்றம் கண்டறிந்தது.
- பிரியங்கா ஸ்ரீவஸ்தவா மற்றும் உத்தரப் பிரதேச மாநில அரசு இடையிலான (2015) வழக்கின் படி, ஆதாரமாக அமையும் உறுதி/பிரமாணப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறியது ஒரு சரி செய்யக் கூடிய பிழையாகும், ஆனால் ஒரு நீதிபதி ஒரு உத்தரவை பிறப்பிப்பதற்கு முன்பு அதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று அது தெளிவு படுத்தியது.
- கூட்டுக் கலந்தாலோசிப்பு வழக்கு என்பது கட்சிதாரர்கள் ஒருவருக்கொருவர் உண்மையாக எதிர்ப்பதற்குப் பதிலாக ஒத்துழைப்பினை மேற்கொண்டு வழக்காடும் வழக்குகளைக் குறிக்கிறது.
- கட்சிதாரர்கள் அவர்களுக்கு ஏதுவான முடிவை அடைய அல்லது உண்மையான வழக்காடல் இல்லாமல் சட்டங்களைச் சவால் செய்ய ஒன்றாகச் செயலாற்றுகின்றன.




# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-பிரேசில் உயிரி எரிபொருள் கூட்டணி

- தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் தூய்மையான எரிசக்தி மாற்றத்தில் வேரூன்றிய ஓர் உத்திசார் உயிரி எரிபொருள் கூட்டணியை இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் முன்னெடுத்துள்ளன.

- இந்தக் கூட்டணியானது பகிரப்பட்ட பருவநிலை இலக்குகளுடன் ஒத்துழைப்பினை மேற்கொள்கிறது மற்றும் பசுமைத் தொழில்மயமாக்கல் மற்றும் கிராமப்புற மேம்பாட்டினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுங்க வரி சார்ந்த பதட்டங்கள் இருந்தபோதிலும், 2023 ஆம் ஆண்டில் G20 அமைப்பில் இந்தியாவின் தலைமையின் போது தொடங்கப்பட்ட உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணி மூலம் இந்தியா, பிரேசில் மற்றும் அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைப்பினை மேற்கொண்டு வருகின்றன.
- பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வினைக் குறைப்பதற்கும், எரிசக்திப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கும் எத்தனால் கலவை, நிலையான விமான எரிபொருள் மற்றும் கலவை எரிபொருள் தொழில்நுட்பங்களை இந்தக் கூட்டணி ஊக்குவிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்குள் 20 சதவீத எத்தனால் கலவை என்ற இந்தியாவின் இலக்கு பிரேசிலின் மேம்படுத்தப் பட்ட கரும்பு அடிப்படையிலான எத்தனால் தயாரிப்பு உள் கட்டமைப்புடன் ஒத்துப் போகிறது.
- கரும்பிலிருந்துப் பெறப்பட்ட எத்தனால் மூலம் பிரேசில் அதன் வாகன எரிபொருள் தேவையில் 30 சதவீதத்திற்கும் அதிகமானவற்றை பூர்த்தி செய்கிறது.
- இந்தியாவானது நெல், வைக்கோல், மக்காச்சோளம் போன்ற தீவனங்கள் மற்றும் பயன்படுத்தப் பட்ட சமையல் எண்ணெய் போன்றவற்றை அதன் எத்தனால் உற்பத்தி உத்தியில் ஒருங்கிணைக்கிறது.
- 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இயற்றப்பட்ட பிரேசிலின் 2025 ஆம் ஆண்டு எதிர்கால எரிபொருள்கள் சட்டத்தில் உயிரி டீசல் கலப்பை 14 சதவீதம் என்ற இலக்கிலிருந்து, 2030 ஆம் ஆண்டிற்குள் படிப்படியாக அதிகரிப்பதை கட்டாயம் ஆக்குகிறது.
- இந்தியாவின் கொள்கையானது, அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு மற்றும் நிலையான விமான எரிபொருள்களிலும் விரிவுபடுத்தும் திட்டங்களுடன் 10 சதவீத எத்தனால் கலப்பினை ஆதரிக்கிறது.
- பிரேசிலின் பெட்ரோபிராஸ் அதன் 2025 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் உயிரி டீசல் மற்றும் உயிரி மீத்தேன் திட்டங்களில் 600 மில்லியன் அமெரிக்க டாலர்களை முதலீடு செய்கிறது.
- நிலையான விமான எரிபொருள் ஆனது, உமிழ்வை 80 சதவீதம் வரை குறைக்கும், ஆனால் அதன் உலகளாவிய விநியோகம் இன்னும் குறைவாகவே உள்ளது.



## ஸ்டேபிள்காயின்கள் மீதான ஒழுங்குமுறை - ஹாங்காங்

- ஃபியட் நாணயத்துடன் இணைக்கப்பட்ட ஸ்டேபிள்காயின்களுக்கு (நிலையான எண்ணிம நாணயங்கள்-FRS) உரிமம் வழங்கவும், அவற்றை ஒழுங்குமுறைப்படுத்தவும் ஹாங்காங் அரசு ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் ஸ்டேபிள்காயின்கள் அவசரச் சட்டத்தை அமல்படுத்தியுள்ளது.
- சில்லறை முதலீட்டாளர்களுக்கு உரிமம் பெறாத ஸ்டேபிள்காயின்களை வழங்குவது அல்லது சந்தைப்படுத்துவது தற்போது புதிய சட்டத்தின் கீழ் சட்டவிரோதமானதாக அறிவிக்கப்படுகிறது.
- நிறுவனங்கள் ஹாங்காங் நாணயவியல் ஆணையத்திடம் (HKMA) உரிமம் பெற வேண்டும் மற்றும் சொத்து இருப்பு, தணிக்கைகள் மற்றும் பணமோசடித் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த கடுமையான விதிகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
- ஸ்டேபிள்காயின்கள் என்பது அவற்றின் மதிப்பை ஒப்பீட்டளவில் நிலையானதாக வைத்திருக்க ஃபியட் நாணயங்கள் அல்லது பொருட்களுடன் இணைக்கப்பட்ட இணைய சங்கேத (கிரிப்டோ) சொத்துக்கள் ஆகும்.
- உலகளவில், 250 பில்லியன் டாலருக்கும் அதிகமான மதிப்புள்ள ஸ்டேபிள்காயின்கள் புழக்கத்தில் உள்ளன, அவை வர்த்தகம், பணம் அனுப்புதல் மற்றும் நிலையற்றப் பொருளாதாரங்களில் சேமிப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்றன.
- அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் போன்ற சில நாடுகள் ஸ்டேபிள்காயின் விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளன.





# பொருளாதாரச் செய்திகள்

## 2026 ஆம் நிதியாண்டிற்கான வருமான வகைப்பாடு குறித்த புதுப்பிப்பு

- உலக வங்கிக் குழுவானது உலக நாடுகளை குறைந்த வருமானம், குறைந்த-நடுத்தர வருமானம், உயர்-நடுத்தர வருமானம் மற்றும் உயர் வருமானம் என நான்கு வருமானக் குழுக்களாக வகைப்படுத்துகிறது.
- இந்த வகைப்பாடுகள் தகவல் பதிவு/அட்லஸ் முறையைப் பயன்படுத்தி, அமெரிக்க டாலர்களில் தனிநபர் மொத்த தேசிய வருமானத்தை (GNI) அடிப்படையாகக் கொண்டவை.
- இந்த வகைப்பாடுகள் ஆனது, முந்தைய ஆண்டின் தரவைப் பயன்படுத்தி ஆண்டு தோறும் ஜூலை 01 ஆம் தேதியன்று புதுப்பிக்கப்படும்.

- வருமான வகைப்பாடு ஒரு நாட்டின் மேம்பாட்டு நிலை மற்றும் வளர்ச்சி உதவி மற்றும் சலுகை நிதியுதவிக்கான தகுதியில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.
- 1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலிருந்து, குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது, அதே நேரத்தில் அதிக வருமானம் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.





- 1987 ஆம் ஆண்டில், 30 சதவீத நாடுகள் குறைந்த வருமானம் கொண்டவையாகவும், 25 சதவீதம் அதிக வருமானம் கொண்டவையாகவும் இருந்தன.
- கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் 1987 ஆம் ஆண்டில் 26 சதவீதமாக இருந்த குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் எண்ணிக்கையை 2024 ஆம் ஆண்டில் 3 சதவீதமாகக் குறைத்தன.
- 1987 அல்லது 2024 ஆம் ஆண்டில் ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் குறைந்த வருமான நாடுகள் எதுவும் பதிவாகவில்லை.
- 2024 ஆம் ஆண்டில் இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் குறைந்த வருமான நாடுகள் எதுவும் இல்லை, மேலும் அங்கு அதிக வருமானம் கொண்ட நாடுகள் 9 என்ற சதவீதத்தில் இருந்து 46 சதவீதமாக அதிகரித்தன.
- மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவின் குறைந்த வருமான நாடுகள் 2 என்ற அளவில் இருந்து 3 ஆக அதிகரித்தன மற்றும் அதிக வருமான நாடுகள் 35 சதவீதமாக உயர்ந்தன.
- தெற்காசியாவின் நாடுகள் 1987 ஆம் ஆண்டில் அனைத்து குறைந்த வருமான நாடுகளிலிருந்தும் 2024 ஆம் ஆண்டிற்குள் கீழ்நிலை-நடுத்தர மற்றும் உயர்-நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் என்ற நிலைக்கு முன்னேறின.
- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியின் ஒரு நாடு அதிக வருமானத்தை அடைந்ததுடன், குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் எண்ணிக்கை 1987 ஆம் ஆண்டில் 75 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 45 சதவீதமாகக் குறைந்தன.
- சிறப்பு வாக்களிப்பு உரிமைகள் (SDR) பணமதிப்பிறக்கத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் பணவீக்கத்திற்கான வகைப்படுத்தல் வரம்புகளானது ஆண்டுதோறும் சரி செய்யப் படுகின்றன.
- 2026 ஆம் நிதியாண்டில், கோஸ்டாரிகா நாடானது மூன்று ஆண்டுகளில் சராசரியாக 4.7 சதவீத வலுவான வளர்ச்சிக்குப் பிறகு உயர்-நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் நிலையில் இருந்து உயர் வருமான நாடு என்ற நிலைக்கு மாறியது.
- சுற்றுலா மற்றும் பணம் அனுப்புதலின் வளர்ச்சி காரணமாக கபோ வெர்டே மற்றும் சமோவா ஆகியவை கீழ்மட்ட-நடுத்தர வருமான நாடுகள் என்ற நிலையில் இருந்து உயர்-நடுத்தர வருமான நாடுகள் நிலைக்கு முன்னேறின.

- மெதுவான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மற்றும் மக்கள்தொகை திருத்தங்கள் காரணமாக நமீபியா உயர்-நடுத்தர வருமான நாடுகள் என்ற நிலையில் இருந்து கீழ்மட்ட-நடுத்தர வருமான நாடுகள் நிலைக்குச் சென்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆசிய இராட்சத ஆமை மீண்டும் அறிமுகம்

- ஆசியாவின் மிகப்பெரிய ஆமையானது, நாகாலாந்தில் உள்ள ஜெலியாங் சமூக வளங் காப்பகத்தில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ஆசிய இராட்சத ஆமை ஆனது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- ஒரு தசாப்தத்திற்கும் முன்னதாக அவை நாகாலாந்தில் அழிந்து போயின.
- "காட்டின் சிறிய யானைகள்" என்று அழைக்கப்படுகின்ற அவை, விதைப் பரவல், காடுகளின் மீளுருவாக்கம் மற்றும் வனத் தளத்தைச் சுத்தம் செய்வதில் உதவுகின்றன.





## வடகிழக்குப் பகுதியில் கிப்பன் குரங்குகளின் வளங்காப்புத் திட்டம்



- சர்வதேச உயர்நிலைப் பாலூட்டியியல் சங்கத்தின் (IPS) 30வது மாநாடு ஆனது மடகாஸ்கரில் உள்ள அன்டனனரிவோவில் நடைபெற்றது.
- இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட குரங்கு இனமான வெஸ்டர்ன் ஹூலாக் கிப்பன், அசாமில் சுமார் 7000 என்ற எண்ணிக்கையில் காணப்படுகிறது.
- உலகளவில் வெஸ்டர்ன் ஹூலாக் கிப்பனின் எண்ணிக்கை சுமார் 32,500 என மதிப்பிடப் பட்டுள்ளது.
- அவை மியான்மர், வங்காளதேசம் மற்றும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் பரவி உள்ளன.
- ஆசியாவில் காணப்படும் கிப்பன் இனங்கள் தற்போது IUCN அமைப்பின் செந்நிறப் சிவப்புப் பட்டியலில் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சத்ய பால் மாலிக்





- சத்ய பால் மாலிக் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதியன்று டெல்லியில் காலமானார்.
- 2019 ஆம் ஆண்டில் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்படுவதற்கு முன்பு ஜம்மு காஷ்மீரின் கடைசி ஆளுநராக இவர் இருந்தார்.
- 2021 ஆம் ஆண்டு விவசாயிகள் போராட்டத்தையும், பெண் மல்யுத்த வீரர்களின் போராட்டத்தையும் அவர் ஆதரித்தார்.
- 1974 ஆம் ஆண்டு சௌத்ரி சரண் சிங் ஆட்சியின் கீழ் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய அவர், பின்னர் காங்கிரஸ், ஜனதா தளம் மற்றும் பாஜக உள்ளிட்ட பல கட்சிகளில் இணைந்தார்.
- பீகார், ஜம்மு காஷ்மீர், கோவா மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்களில் ஆளுநராகப் பணியாற்றினார்.
- 2013 ஆம் ஆண்டு முசாபர்நகர் கலவரத்திற்குப் பிறகு மேற்கு உத்தரப் பிரதேசத்தில்

பாஜக கட்சியில் முக்கியப் பங்கு வகித்தார்.

# முக்கிய தினங்கள்

## இந்திய உறுப்பு தான தினம் 2025 - ஆகஸ்ட் 03

- இந்தத் தேதியானது இந்தியாவில் முதல்முறையாக வெற்றிகரமான உயிரிழந்தவரின் உறுப்பு தானம் மூலம் மேற்கொள்ளப்பட்ட இதய மாற்று அறுவை சிகிச்சையை நினைவு கூரும் தேதியாக இத்தினம் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 03 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டு, மத்திய அரசு, "அங்தான்-ஜீவன் சஞ்சீவானி அபியான்" என்ற பெயரில் ஒரு வருட கால தேசியப் பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- நாடு முழுவதும் உறுப்பு மற்றும் திசு தானத்தை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 18911 மாற்று அறுவை சிகிச்சைகள் NOTTO அமைப்பிடம் பதிவு செய்யப்பட்டுள்ளன.




## ஹிரோஷிமா தினம் 2025 - ஆகஸ்ட் 06




- 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 ஆம் தேதியன்று, அமெரிக்கா மனித வரலாற்றில் முதல் அணுகுண்டை ஜப்பானிய நகரமான ஹிரோஷிமா மீது வீசியது.

- B-29 குண்டுவீச்சு விமானத்தினால் வீசப்பட்ட இந்த அணுகுண்டு 'லிட்டில் பாய்' என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்டு 140,000க்கும் மேற்பட்ட மக்களின் உயிரை பலி வாங்கியது.
- இந்த ஆண்டு, ஜப்பான் அந்தக் கொடிய குண்டுவெடிப்பின் 80வது ஆண்டு நிறைவை அனுசரித்தது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★